**செய்தி வெளியீடு எண்:691** **நாள்: 16.10.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (16.10.2017) சென்னை ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை**

*************************************************************

**இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி,**

இந்தச் சிறப்புமிக்க விழாவிற்கு வருகை தந்து
ஆளுநர் மாளிகையில் அமைக்கப்பட்டிருக்கும்
400 கிலோ வாட் மின்திறன் கொண்ட சூரிய சக்தி
உற்பத்தி நிலையத்தை திறந்து வைத்தும்

தமிழ்நாட்டின் ஆளுநராகப் பணியாற்றிய காலத்தில் ஏற்பட்ட அனுபவங்களை
நூலாக வடித்திருக்கும் மாண்புமிகு மகாராஷ்டிர ஆளுநர் அவர்களின்
“Those Eventful days” நூலினை வெளியிட்டும் சிறப்பு சேர்த்திருக்கும்

மாண்புமிகு குடியரசுத் துணைத் தலைவர் அவர்களே!
மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களே!
மாண்புமிகு மகாராஷ்டிர ஆளுநர் அவர்களே!
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!
மரியாதைக்குரிய நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

மதிப்பிற்குரிய தலைமைச் செயலாளர் அவர்களே!
வரவேற்புரை ஆற்றி அமர்ந்திருக்கும் ஆளுநரின் முதன்மைச் செயலாளர் அவர்களே!
நன்றியுரை ஆற்ற இருக்கும்
ஆளுநரின் துணைச் செயலாளர் அவர்களே!
இங்கு கூடியிருக்கும் அரசு உயர் அதிகாரிகளே!
பெரியோர்களே! தாய்மார்களே!
உங்கள் அனைவருக்கும்
முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் நம்முடன் வீற்றிருக்கும்
நமது **துணைக் குடியரசுத் தலைவர்** அவர்கள்,

தமிழ் புரிந்தவர்; தமிழர் நலம் அறிந்தவர்;
தமிழ்நாட்டு நலன் காக்க உதவி வருபவர்;
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்;

23.7.2016 அன்று ஆர்.கே. நகரில் நடைபெற்ற
மெட்ரோ இரயில் துவக்க விழாவில்
மாண்புமிகு அம்மா அவர்கள் இவரைப் பற்றி.......

**“தமிழ்நாட்டின் உற்ற நண்பர் திரு. வெங்கையா நாயுடு அவர்கள் ஆவார். தமிழக நலன்களைக் காப்பதிலும்**
**தமிழக அரசின் திட்டங்களுக்கு மத்திய அரசின் அனுமதியை விரைந்து பெற்றுத் தருவதிலும் முன் நிற்பவர்**
**திரு. வெங்கையா நாயுடு என்று சொன்னால்**
**அது மிகையல்ல”**
என்று அந்த விழாவில் பெருமை பொங்கக் குறிப்பிட்டார்கள்.

அப்படிப்பட்டவர் தற்போது இந்தியக் குடியரசுத் துணைத் தலைவராக இங்கு வந்து அமர்ந்திருப்பது
தமிழர்களுக்கு எல்லாம் பெருமகிழ்ச்சியை அளித்துள்ளது.

மகாராஷ்டிர மாநில ஆளுநரும்
நமது மாநில முன்னாள் ஆளுநருமாகிய
மாண்புமிகு **திரு. வித்யாசாகர் ராவ்** அவர்கள்
ஒரு சிறந்த வழக்கறிஞர்;
முன்னாள் மத்திய அமைச்சர்;
அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு,
ஜனநாயக மரபுகளின்படி தனக்கு அளிக்கப்பட்ட பணியைச் சிறப்பாகச் செய்தவர்; செய்து வருபவர்;
இந்த விழா நடைபெறக் காரணமானவர் என்பதையும் பெருமையுடன் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல,
தெய்வப்புலவர் திருவள்ளுவருக்கு
ஆளுநர் மாளிகை வளாகத்தில் சிலை அமைத்தவர்;

தமிழ் மூதாட்டி அவ்வையாருக்கும்

இவ்வளாகத்தில்  சிலை அமைத்து,
அச்சிலைக்கு அருகே
‘ஆத்திசூடி’ பலகையினை நிறுவி,
தமிழ் மீதும், தமிழ்நாட்டு மக்கள் மீதும்
தனக்கு உள்ள பற்றை வெளிப்படுத்தியவர்.

ஆளுநர் மாளிகையைப்
பொதுமக்கள் பார்வையிட திறந்துவிட்டு
தமிழ் மக்களின் இதயங்களில் இடம் பிடித்தவர் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

நமது மாநிலத்திற்கு ஆளுநராகப் புதியதாகப் பொறுப்பேற்றுள்ள **மாண்புமிகு பன்வாரிலால் புரோகித்** அவர்கள் மகாராஷ்டிர மாநிலம்,
நாக்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகச் செயல்பட்டவர்.

மகாராஷ்டிர மாநில அமைச்சராகவும்
தன்னை உயர்த்திக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டவர்.
நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.
அசாம் மாநில ஆளுநராகத் தனது கடமையைச் சிறப்பாகச் செய்தவர்.
பழுத்த அரசியல் அனுபவம் பெற்றவர்.
இவர் தமிழ்நாட்டிற்கு ஆளுநராகப்
பொறுப்பு ஏற்று இருப்பதால்,
தமிழ்நாடு மேன்மேலும் சிறப்பு பெறும் என்பதில் சந்தேகமில்லை.

இன்றைய தினம்,
மாண்புமிகு குடியரசுத் துணைத் தலைவர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ள சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையமானது ஆண்டொன்றுக்கு சுமார் ஆறு இலட்சம் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திறன் கொண்டது
என அறிந்தேன்.

இதன் மூலம் ஆளுநர் மாளிகையின்
மொத்த மின் தேவையில் 80 விழுக்காடு
பூர்த்தி செய்யப்படும் என்றும்,
ஆண்டுக்கு 45 இலட்சம் ரூபாய்
மின்கட்டணச் செலவு சேமிக்கப்படும் எனவும்
தெரிய வருகிறது. இது மிகவும் வரவேற்கத்தக்கது.

சூரிய மின் சக்தியை
அதிக அளவில் உற்பத்தி செய்து
சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது
மாண்புமிகு அம்மா அவர்களின் விஷன் 2023–இல் உள்ள திட்டங்களில்
முக்கியமானது ஆகும்.

புதுப்பிக்கத்தக்க மின்னாற்றலைப்
பெருமளவில் உற்பத்தி செய்ய வேண்டும் என்பதில் மாண்புமிகு அம்மா அவர்கள்
மிகுந்த முனைப்பு காட்டினார்கள்.
அதனடிப்படையில்,
தமிழ்நாடு சூரிய மின்சக்தி கொள்கையை 2012–இல் அறிவித்தார்கள்.
இதன்மூலம், தமிழ்நாட்டில் சூரிய மின் சக்தி தொடர்பாக பல்வேறு முன்னோடித்
திட்டங்கள்
செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முன்னிலையில் 4.7.2015 அன்று,
648 மெகா வாட் அளவுக்கு சூரிய மின்சாரம் வாங்குவதற்கான கொள்முதல்
ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டது.
இதனைத்தொடர்ந்து,
மாண்புமிகு அம்மா அவர்கள்
21.9.2016 அன்று கலந்து கொண்ட
கடைசி அரசு நிகழ்ச்சியில்
4,536 கோடி ரூபாய் முதலீட்டில் நிறுவப்பட்டுள்ள
648 மெகா வாட் திறன் கொண்ட
சூரிய மின் சக்தி உற்பத்தி நிலையத்தையும்
திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த இந்த அரசும் புதுப்பிக்கத்தக்க
மின்சக்திக்கு
அதிக முக்கியத்துவம் அளிக்கிறது.

சமீபத்தில் 26.9.2017 அன்று
எனது முன்னிலையில்
தமிழ்நாட்டில் 9 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் நிறுவப்படவுள்ள 16 சூரிய சக்தி
மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும்

1500 மெகாவாட் சூரிய மின் சக்தியை
கொள்முதல் செய்ய ஒப்பந்தம் ஒன்று
கையெழுத்தானது.

தற்போது தமிழ்நாட்டில்,
1786.48 மெகாவாட் சூரிய மின் சக்தி
நிறுவுத் திறன் உள்ளது.
இதில் 78.44 மெகாவாட்
மேற்கூரை சூரிய மின் சக்தியும் அடங்கும்.
தமிழ்நாட்டில், சூரிய ஒளி மின்சாரம்,
பகல் பொழுதில் 800 முதல் 1200 மெகாவாட் அளவிற்கு கிடைக்கப் பெறுகிறது.

**நாட்டிலேயே, தமிழ்நாடு**
**புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் உற்பத்தியில்**
**முன்னிலை வகிக்கின்றது என்ற செய்தியை இத்தருணத்தில் பெருமகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.**

இந்தச் சீர்மிகு விழாவில்
கலந்து கொள்ள வாய்ப்பளித்த
மாண்புமிகு குடியரசுத் துணைத் தலைவர் மற்றும் மாண்புமிகு ஆளுநர்கள்
இருவருக்கும்
என்னுடைய மனமார்ந்த நன்றியைத்

தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

நன்றி! வணக்கம்!

*****

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**